**2025 நவம்பர் மாதம் 27 – ஆம் தேதி வியாழக்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**O.S. நெம்பர் : 271/2021**

O.S. No.: 271/2021 – ஏஞ்சல்மேரி PW1 27.11.2025

க/பெ.சவரிமுத்து

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை படித்துப் பார்த்து கையொப்பம் செய்துள்ளேன். நான் எட்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 10 வருடங்களாக தண்ணீர் இல்லாததால் விவசாயம் எதுவும் செய்யவில்லை, ஏலத்தோட்டம் உள்ளது. பூப்பாறையில், கோரம்பாறையில் ஏலத்தோட்டம் உள்ளது. ஊரில் உள்ள நிலங்களில் தண்ணீர் இல்லாததால் மக்காச்சோளம் மட்டும் பயிரிடுவோம். நானும், எனது கணவரும் தேவாரம், சிந்தலைச்சேரியில் ஒன்றாக ஒரே வீட்டில் தற்போது வரை குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். நான் யாருக்கு பணம் கொடுத்தாலும் எனது கணவருக்கு தெரியும், அதேபோன்று எனது கணவர் யாருக்கு பணம் கொடுத்தாலும் எனக்கு தெரியும். 1, 2 பிரதிவாதிகள் எனக்கு நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். 1. 2 பிரதிவாதிகளுக்கு எங்கள் வீட்டில் வைத்து பணம் கொடுத்தேன். எங்கள் வீட்டில் வைத்து பணம் கொடுக்கும்போது நான், எனது மகன், எனது கணவர் மற்றும் இரண்டு சாட்சிகள் இருந்தார்கள். எனது மகன் பெயர் பீட்டர் குழந்தை ஆகும். 2019 ம் வருடம் 10 வது மாதம் 4 ம் தேதி பணம் கொடுத்தேன். ஜான்சி ராணியிடம் ரூ.12,50,000/–மும், அலெக்ஸ் ஆரோக்கியராஜிடம்

ரூ.12,50,000/– மும் ஆக மொத்தம் ரூ.25 லட்சம் கொடுத்தேன். 2 ரூபாய் வட்டிக்கு பணம் கொடுத்தேன். ஒரு வீட்டு பத்திரம், இரண்டு கடனுறுதிச்சீட்டுக்கள் கொடுத்தார்கள். நான், எனது மகன், எனது கணவர் மூன்று பேரும் பணத்தை எண்ணிக்கொடுத்தோம். ரூ.100/– கட்டுக்கள் எத்தனை கட்டுக்கள் கொடுத்தேன் என்று ஞாபகமில்லை. நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் பிரதிவாதிகள் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்தார்கள் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் ரூ.100/–க்கு ரூ.7/– வட்டி வாங்கியதாக சொல்லியுள்ளார்கள் என்றால் பொய்யாக சொல்லியுள்ளார்கள். 1, 2 பிரதிவாதிகள் காவல்நிலையத்தில் என்மீதும், என் கணவர் மீதும் புகார் கொடுத்து அதன்பேரில் நடந்த விசாரணையின்பேரில் நீதிமன்றத்தில் சென்று பார்த்துக்கொள்ளுமாறு சொல்லிவிட்டார்கள். 1, 2 பிரதிவாதிகளின் உறவினர்கள் மீது நானும், எனது கணவரும் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. எனது கணவர் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக வேறு நபர்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. இந்நீதிமன்றத்தில் நான் ரூ.25 லட்சம் கடன் கொடுப்பதற்கு எனக்கு வசதியிருப்பதாக வங்கி கணக்கு அறிக்கையோ அல்லது வேறு ஆவணமோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா ரூ.25 லட்சத்தை தவிர வேறு யாருக்கும் கடன் கொடுத்துள்ளோமா என்றால் இல்லை, எங்களிடம் இருந்த ரூ.25 லட்சத்தை வட்டிக்கு கொடுத்துவிட்டோம். எனது கணவர் 1ம் பிரதிவாதியின் தந்தை ஜேம்ஸ் மீது அசல் வழக்கு எண்.151/2022 என உத்தமபாளையம் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் இல்லை. எனது கணவர் இந்நீதிமன்றத்தில் வேளாங்கண்ணி என்பவர் மீது கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக அ.வ.256/2021 என வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த

வழக்கு இன்று வாய்தாவிற்கு வந்தது என்றால் சரிதான். நாங்கள் கொடுக்கல் வாங்கல் செய்யும் தொகைக்கு வருமான வரி கட்டியுள்ளோமா என்றால் எனது மகனிடம் கேட்டால் தான் தெரியும். பிரதிவாதிகளுக்கு ரூ.25 லட்சம் கொடுக்கும் அளவிற்கு தகுதியில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் ரூ.25 லட்சம் எதற்காக கடன் கேட்டார்கள் என்றால் வீடு கட்டுவதற்காக லோன் போட்டுள்ளோம் என்றும், 3 மாதங்களுக்குள் திருப்பி தருவதாக சொன்னதின் அடிப்படையில் பணத்தை கொடுத்தேன். இந்த வழக்கிற்கு பிறகு பிரதிவாதிகள் அவர்களின் சொந்த வீட்டை ரூ.18 லட்சம் ரூபாய்க்கு விற்றுவிட்டார்கள். நான் கடன் கொடுத்தது கொரோனா ஊரடங்கு சமயம் என்றால் சரிதான். ஜேம்ஸ் பத்திரத்தை வாங்கிக்கொண்டு அதில் நடவடிக்கை எடுக்காமல் கடனுறுதிச்சீட்டின்பேரில் நடவடிக்கை எடுத்துள்ளேன் என்றும், நான் அவ்வாறு செய்தது தவறு என்றும் சொன்னால் சரியல்ல. நானும் எனது கணவரும் பல நபர்களிடம் பணத்தை குறைவாக கொடுத்து அதிகமான தொகைக்கு கடனுறுதிச்சீட்டுக்களை பூர்த்தி செய்து பல நபர்களின் வீடுகளையும் சொத்துக்களையும் வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. என்மீதும், என் கணவர் மீதும் தேவாரம் காவல்நிலையத்தில் பல அடிதடி பிரச்சனைகளும் கொடுக்கல் வாங்கல் புகார்களும் இருந்தன என்று சொன்னால் சரியல்ல. தற்போதும் எனது கணவர் உத்தமபாளையம் சார்பு நீதிமன்றத்தில் ஜேம்ஸ் மீது ரூ.10 லட்சத்திற்கு வழக்கு தாக்கல் செய்து 05.12.2025ம் தேதி வாய்தா வருகிறது என்று சொன்னால் தெரியாது. எனது கணவர் என்னுடன் தான் வசித்து வருகிறார். என் வீட்டில் வைத்து ஜான்சிராணி கையொப்பம் செய்தார், அலெக்ஸ் ஆரோக்கியராஜ் அவரின் வீட்டில் வைத்து கையொப்பம் செய்தார், அதனால் வேறு வேறு பேனாவினால்

கையொப்பம் செய்திருக்கலாம், அதனால் மை வித்தியாசம் ஏற்பட்டிருக்கலாம். தாவா கடனுறுதிச்சீட்டுக்களில் உள்ள கையொப்பம் ஜான்சிராணியின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல, நான் தான் கையொப்பம் வாங்கினேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் ஜான்சிராணி கையொப்பங்களை மாற்றி மாற்றி போட்டுள்ளார், மை வித்தியாசம் உள்ளது என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, வழக்கறிஞர் குறுக்கு விசாரணையில் கேட்டப்பிறகு தான் மை வித்தியாசமும், கையொப்பங்கள் வித்தியாசமும் உள்ள விபரம் தெரியவந்தது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் எனது கணவர் சவரிமுத்து இந்நீதிமன்றத்தில் கடன் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக வேளாங்கண்ணி மீது வழக்கு நிலுவையில் உள்ள விபரத்தை நான் தெரியப்படுத்தவில்லை என்றால் சரிதான். கடனுறுதிச்சீட்டிற்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றும், கையொப்பங்கள் வித்தியாசமாக உள்ளதாலும், சந்தேகத்திற்கிடமாக இருப்பதாலும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 27.11.2025 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

Exhibit A7-PW1 in OS-148/2023 02-12-2025

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.11.27 18:12:05 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC), தேனி.
27.11.2025.